# ‘மிக்ஜாம்’ பெரும் புயல் : பாதிப்பிலிருந்து மீண்ட மக்கள்!

# நிவாரணப் பணிகளை முனைப்புடன் நிறைவேற்றும் கழக அரசு!



செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் முடிச்சூர் பகுதியில் கனமழையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முடிச்சூர் சி.எஸ்.ஐ ஆலயத்தில் உள்ள வெள்ள நிவாரண முகாமில் உணவு, அரிசி, பாய், போர்வை உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் உணவு பாதுகாப்பு துறை அமைச்சர் சக்கரபாணி ஆகியோர் வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆ.ர.ராகுல் நாத், ஊரக வளர்ச்சி ஊராட்சி துறை செயலாளர் செந்தில்குமார், ஊரக வளர்ச்சித்துறை இயக்குனர் பொன்னையா, மாவட்ட கண்காணிப்பு அலுவலர்/வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை அரசு செயலாளர் சமயமூர்த்தி மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.



மிக்ஜாம் புயல் காரணமாக, தொடர்ந்து பெய்த கனமழையினால் சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்கள் பெரிதும் பாதிப்படைந்தது. முதலமைச்சர் அறிவுறுத்தலின்படி, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு , பாதிப்புள்ளான வேளச்சேரி, மடிப்பாக்கம், பள்ளிக்கரனைப் பகுதிகளுக்குச் சென்று, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்களை தொடர்ந்து 4வது நாளாக (8.12.2023 நேற்று வழங்கினார்.



வடகிழக்கு பருவமழை மற்றும் மிக்ஜாம் புயல் காரணமாக திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆவடி மாநகராட்சி பகுதியில் உள்ள நரிக்குறவர் மக்களுக்கு முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளரும் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ தலைமையில் வேளாண்மை மற்றும் உழவர் நலன் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் 1000 நபர்களுக்கு படுக்கை போர்வை பால் ரொட்டி இறைச்சி உள்ளிட்ட நிவாரண பொருட்களை வழங்கினர் .அருகில் ஆவடி மாநகராட்சி மேயர் ஜி.உதயகுமார், ஆவடி மாநகராட்சி ஆணையர் ஷேக் அப்துல்லா ரகுமான், ஆவடி மாநகர பொறுப்பாளர் சன்.பிரகாஷ், ஆவடி மண்டலகுழுதலைவர் ஜோதிலட்சுமி நாராயண பிரசாத், மாநில மாணவர் அணி இணைச்செயலாளர் சி.ஜெரால்டு, பகுதிச்செயலாளர்கள் ஜி.நாராயண பிரசாத், ஜி.ராஜேந்திரன், பொன்.விஜயன், ஆவடி மாநகர காவல் துணை ஆணையர் அய்மன் ஜமால், உள்பட பலர் உள்ளனர்.



முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (08.12.2023) மிக்ஜாம் புயலினால் பாதிக்கப்பட்ட சென்னை, சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நெருப்பு மேடு, செட்டித்தோட்டம், ஜோதி அம்மாள் நகர் (சைதாப்பேட்டை ஆடுதொட்டி அருகில்) ஆகிய பகுதிகளில் உள்ள மக்களுக்கு அரிசி, பெட் சீட், பால், பிஸ்கேட், பிரட் ஆகிய பொருட்களை வழங்கினார். இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மதிப்பிற்குரிய மகேஷ்குமார், மண்டலக்குழுத் தலைவர்கள் கிருஷ்ணமூர்த்தி, துரைராஜ் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உடனிருந்தனர்.



சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நேற்று (08.12.2023) சென்னை, ராஜா அண்ணாமலை மன்றத்தில் மிக்ஜாம் புயல் மற்றும் கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு வழங்கினார். உடன் கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளரும், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன், மாநகராட்சி மண்டல குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, துறைமுகம் பகுதி கழக செயலாளர்கள் எஸ். ராஜசேகர், எஸ். முரளி,மாவட்ட திமுக இளைஞரணி துணை அமைப்பாளர் பா.ஜெகதீஷ், வட்டக் கழகச் செயலாளர்கள் பிரபாகரன், சதீஷ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



காஞ்சிபுரம் மாவட்டம், வையாவூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி நிவாரண முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள, தாழ்வான பகுதியில் குடியிருந்த இருளர் குடியிருப்பை சார்ந்த நபர்களுக்கு நிவாரண பொருட்களை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி நேற்று வழங்கினார். உடன் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் முனைவர் பி.செந்தில்குமார், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன், உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன், காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் திருமதி.எம்.மகாலட்சுமி யுவராஜ், உதவி ஆட்சியர் (பயிற்சி) செல்வி.க.சங்கீதா, வாலாஜாபாத் ஒன்றியக் குழுத்தலைவர் ஆர்.கே.தேவேந்திரன் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.



திருவள்ளூர் மாவட்டம், கும்முடிப்பூண்டி தொகுதிக்குட்பட்ட பூண்டி ஒன்றியம் கச்சூர் ஊராட்சியில் மிக்ஜாம் புயல் பாதிக்கப்பட்ட 800 குடும்பங்களுக்கு உணவு மற்றும் போர்வை அத்தியாவசியமான மளிகைப்பொருட்களை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்;.காந்தி, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் மதுரை பி.மூர்த்தி வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ உள்ளிட்ட ஒன்றிய செயலாளர்கள், மாவட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதிக்குட்பட்ட மீஞ்சூர் ஒன்றியம் பழவேற்காடு ஊராட்சியில் மிக்ஜாம் புயல் பாதிக்கப்பட்ட 3000 குடும்பங்களுக்கு உணவு மற்றும் போர்வை அத்தியாவசியமான மளிகைப் பொருட்களை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் மதுரை பி.மூர்த்தி மீன்வளம் மீனவர் நலத்துறை (ம) கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அனிதா ஆர். ராதா கிருஷ்ணன் வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே. ஜெயக்குமார், பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகர், திருவள்ளூர் மாவட்ட ஊராட்சி குழு பெருந்தலைவர் கேவிஜி உமா மகேஸ்வரி, உள்ளிட்ட ஒன்றிய செயலாளர்கள், மாவட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் மாநில ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.